முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சேலம்.

முன்னிலை: திரு. இரா.வேலரஸ், பி.எஸ்.சி., பி.எல்., எல்.எல்.எம்.,
முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சேலம்.
2026-ம் ஆண்டு ஜுன் மாதம் 29-ம் நாள் திங்கட்கிழமை

குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கு எண். 99/2025

(CNR. No. TNSA-01-000027-2025)

| | | |
|---|---|---|
| விசாரணை நீதிமன்றத்தின் விவரம் | - | நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சங்ககிரி |
| விசாரணை நீதிமன்ற வழக்கு எண் | - | STC.No.133/2022 |
| மேல்முறையீட்டு வழக்கு எண் | - | C.A.No.99/2025 |
| மேல்முறையீட்டாளரின் விவரம் | - | K.பூபதி கிருஷ்ணன் (42),<br>த/பெ.கந்தசாமி,<br>கொய்யாமரத்துகாடு,<br>குப்பனூர் அஞ்சல்,<br>சங்ககிரி தாலூக்கா,<br>சேலம் மாவட்டம். |
| எதிர்மனுதாரரின் விவரம் | - | S.பாலமுருகன் (55)<br>த/பெ.செங்கோடன்,<br>கதவு எண்.7/23, கரும்பாலிக்காடு,<br>அக்கம்மாபேட்டை அஞ்சல்,<br>மஞ்சக்கல்பட்டி கிராமம்,<br>சங்ககிரி தாலூக்கா,<br>சேலம் மாவட்டம். |
| விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு | - | எதிரியை மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 உ/இ 142-ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து எதிரிக்கு ஒரு வருடம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், மேலும் எதிரி புகார்தாரருக்கு இழப்பீட்டு |

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.06.29 18:46:27 +0530

| | | |
|---|---|---|
| | | தொகையாக ரூ.5,00,000/–ஐ உத்தரவு பகரப்பட்ட நாளிலிருந்து 3 மாதத்திற்குள் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் இரண்டு மாத காலம் சாதாரண சிறைத்தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. |
| மேல்முறையீட்டில் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டதா? ரத்து செய்யப்பட்டதா? அல்லது மாற்றம் செய்யப்பட்டதா? | – | உறுதி செய்யப்பட்டது. |
| மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட நாள் | – | 22.07.2025 |
| வாதுரை கேட்கப்பட்ட நாள் | – | 11.06.2026 |
| மேல்முறையீட்டு தீர்ப்பு பகரப்பட்ட நாள் | – | 29.06.2026 |
| மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு | – | முடிவில், இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. விசாரணை நீதிமன்றம் சுருக்கு விசாரணை வழக்கு எண்.133/2022–இல் கடந்த 26.06.2025–ம் தேதியன்று பிறப்பித்துள்ள தீர்ப்பு மற்றும் தண்டனையை உறுதிசெய்து இம்மேல் முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. எதிரிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்ற விசாரணை நீதிமன்றத்திற்கு உத்தரவிடப்படுகிறது. |

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.06.29 18:46:34 +0530

இம்மேல்முறையீடு 11.06.2026–ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ராமசாமி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.ராஜா அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையிலிருந்து வந்த இவ்வழக்கில் சாட்சியம், சான்றாவணங்கள் மற்றும் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை ஆகியவற்றை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:–

<u>தீ ர் ப் பு ரை</u>

சங்ககிரி, நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தின் சுருக்கு விசாரணை வழக்கு எண்.133/2022 என்ற வழக்கில் கடந்த 26.06.2025–ம் தேதி வழங்கப்பட்ட தீர்ப்பு தண்டனையின் பேரில் இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. புகார்தாரருக்கு எதிரியை நண்பர் என்ற முறையில் கடந்த 3 ஆண்டுகளாக தெரியும் என்றும், எதிரி தனது குடும்ப அவசரம் மற்றும் வியாபார செலவிற்காக கடந்த 01.09.2021ம் தேதியன்று புகார்தாரரிடமிருந்து ரூ.5,00,000/–ஐ கடனாக புகார்தாரரின் வீட்டிற்கு வந்து பெற்றுக்கொண்டார் என்றும், மேற்படி தொகைக்கு ஆதரவாக ஐசிஐசிஐ வங்கி கிளை காசோலை எண். 014673 ஐ 01.10.2021 முன் தேதியிட்டு புகார்தாரருக்கு கொடுத்தார். மேற்படி காசோலையை புகார்தாரர் அவரது வங்கி கணக்குள்ள கரூர் வைசியா வங்கி, சங்ககிரி கிளையில் 01.10.2021ம் தேதி வசூலுக்காக தாக்கல் செய்தபோது எதிரியின் வங்கிக்கணக்கில் போதிய பணமில்லை (Funds Insufficient) என்ற காரணம் கூறி கடந்த 04.10.2021ம் தேதியன்று காசோலை திருப்பப்பட்டது என்றும், இது குறித்து புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 11.10.2021ம் தேதியன்று அறிவிப்பு ஒன்றை எதிரிக்கு அனுப்பியதாகவும், மேற்படி

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.06.29 18:46:40 +0530

அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டு 08.11.2021ம் தேதியன்று பொய்யான சங்கதிகளை கூறி பதிலறிவிப்பை அனுப்பியதாகவும், எதிரி எதிரியின் வங்கிக்கணக்கில் போதிய பணமில்லை என்று தெரிந்திருந்தும் எதிரி புகார்தாரரிடம் காசோலையை கொடுத்து ஏமாற்றியுள்ளதால் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 உ/இ 142ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார்.

3. விசாரணை நீதிமன்றத்தில் அரசு தரப்பில் பு.சா.1 விசாரிக்கப்பட்டு, பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.6 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் எதிரி எ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, எ.த.சா.ஆ.1 மற்றும் எ.த.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4. மேற்படி வழக்கை கோப்பிற்கு எடுத்துக் கொண்ட விசாரணை நீதிமன்றம் சாட்சிகளை விசாரித்து முழுமையான விசாரணைக்கு பின்பு எதிரியை மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 உ/இ 142–ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து எதிரிக்கு ஒரு வருடம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், மேலும் எதிரி புகார்தாரருக்கு இழப்பீட்டு தொகையாக ரூ.5,00,000/–ஐ உத்தரவு பகரப்பட்ட நாளிலிருந்து 3 மாதத்திற்குள் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் இரண்டு மாத காலம் சாதாரண சிறைத்தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதில் குறையுற்ற மேல்முறையீட்டாளர் /எதிரி இம்மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

5. <u>மேல்முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் :–</u>

விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்டத்திற்கும், சாட்சிய சங்கதிகளுக்கும்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.06.29 18:46:48 +0530

முரணாக அமைந்துள்ளது. காசோலையானது கடனை திருப்பிச் செலுத்துவதற்காக மேல்முறையீட்டாளர்/எதிரியால் வழங்கப்படவில்லை என்பதை மேல்முறையீட்டாளர்/ எதிரி நிரூபித்திருந்ததை விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொள்ள தவறிவிட்டது. மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு இவ்வளவு பெரிய தொகையை வழங்குவதற்குப் போதுமான வசதி வாய்ப்புகள் புகார்தாரரிடம் இல்லை என்பதை விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளத் தவறிவிட்டது. எதிரி ஈரோடு சுந்தரம் பைனான்ஸ் நிறுவனத்தில் பெற்ற கடனுக்கு புகார்தாரர் ஜாமீன்தாரராக இருந்ததால், சுந்தரம் பைனான்சில் பெறப்பட்ட கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்காக மேல்முறையீட்டாளர்/எதிரியால் காசோலை வழங்கப்பட்டது என விசாரணை நீதிமன்றம் கருதியுள்ளது. மேல்முறையீட்டாளர்/எதிரியிடமிருந்து சட்டவிரோத ஆதாயத்தைப் பெறுவதற்காக காசோலை போலியாக புனையப்பட்டது என்ற மேல்முறையீட்டாளரின் வாதத்தை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது. எதிர்மேல்முறையீட்டாளர்/புகார்தாரர், 01.09.2021 அன்று மேல்முறையீட்டாளர்/குற்றம் சாட்டப்பட்டவருக்கு ரூ.5,00,000/–த்தைக் கொடுத்ததாக நிரூபிக்கவில்லை என்பதையும், மேற்படித் தொகையை கடனாகக் கொடுப்பதற்கு புகார்தாரரிடம் போதுமான வருமான ஆதாரம் இருந்தது என்பதை எதிர்மேல்முறையீட்டாளர்/புகார்தாரர் நிரூபிக்கவில்லை என்பதையும் விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளத் தவறிவிட்டது. மேல்முறையீட்டாளர் / குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து சட்டவிரோதமான ஆதாயத்தைப் பெறுவதற்காகப் போலியான காசோலையை எதிர்மேல்முறையீட்டாளர்/புகார்தாரர் தயாரித்துள்ளார் என்ற மேல்முறையீட்டாளரின் வாதத்தையும், அந்தக் காசோலை சட்டப்பூர்வமாக

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.06.29 18:46:55 +0530

அமல்படுத்தக் கூடிய கடனுக்காக அல்ல என்பதையும் விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறி விட்டது. எதிர்மேல்முறையீட்டாளர் /புகார்தாரர் பிருத்வி அண்ட் கோ என்ற பெயரில் நடத்தி வந்த போக்குவரத்து நிறுவனத்தில் TN 52-D-5148 என்ற பதிவெண் கொண்ட லாரியில் மேல்முறையீட்டாளர்/எதிரி ஓட்டுநராகப் பணிபுரிந்து வந்துள்ளார் என்பதையும், எதிர்மேல்முறையீட்டாளர்/புகார்தாரர் மேற்படி பதிவெண் கொண்ட லாரியை மேல்முறையீட்டாளர்/எதிரியிடம் விற்பனை செய்யும்போது மேல்முறையீட்டார்/எதிரியிடம் போதுமான முன்பணம் இல்லாததால், எதிர்மேல்முறையீட்டாளர்/புகார்தாரர் தாமாக முன்வந்து Mrs சுந்தரம் பைனான்ஸ் நிறுவனத்துடன் ஒரு கடன் ஏற்பாடு செய்துக் கொடுத்து அவருக்கு ஒரு ஜாமீன்தாரராகவும் இருந்துள்ளார் என்பதையும், மேலும் கடன் வாங்கிய நேரத்தில், மேல்முறையீட்டாளர்/ குற்றம் சாட்டப்பட்டவர் ஐசிஐசிஐ வங்கி, சங்ககிரி கிளையில் வரையப்பட்ட 014672, 014673 மற்றும் 014674 எண்ணுள்ள தொகை மற்றும் பெயர் நிரப்பப்படாத மூன்று காசோலைகளை எதிர்மேல்முறையீட்டாளர் / புகார்தாரருக்கு வழங்கியுள்ளார என்பதையும், எதிர்மேல்முறையீட்டாளர்/புகார்தாரர் மேற்கூறிய கடனுக்கு ஜாமீன்தாரராக இருப்பதால், கடன் தொகையின் பாதுகாப்பிற்காக நிரப்பப்படாத முத்திரைத்தாள்களையும் மேல்முறையீட்டாளர்/ குற்றம் சாட்டப்பட்டவர் வழங்கியுள்ளார் என்பதையும் விசாரணை நீதிமன்றம் பரிசீலனை செய்ய தவறிவிட்டது. சுந்தரம் பைனான்ஸ் நிதி நிறுவனத்தில் பெற்றிருந்த கடன் முடிக்கப்பட்டுவிட்ட பின்னர் காசோலைகளை திருப்பி தரவேண்டும் என எதிரி எதிர்மேல்முறையீட்டாளர்/ புகார்தாரரிடம் கேட்டபோது அவர் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றும், இந்நிலையில் மேல்முறையீட்டாளர்/ எதிரி குடும்பத்திற்கும், புகார்தாரரின் மாமனார் குடும்பத்திற்கும்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.06.29 18:47:03 +0530

இடையே பாதை பிரச்சனை ஏற்பட்ட காரணத்தினால், பழி வாங்கும் நோக்கத்தில் எதிர்மேல்முறையீட்டாளர் / புகார்தாரர் மேற்படி காசோலைகளை நிரப்பி மேல்முறையீட்டாளர்/ எதிரிக்கு எதிராக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதையும் விசாரணை நீதிமன்றம் பரிசீலனை செய்ய தவறிவிட்டது. மேல்முறையீட்டாளர்/எதிரிக்கும், எதிர்மேல்முறையீட்டாளர்/ புகார்தாரருக்கும் இடையிலான பணப் பரிவர்த்தனையை புகார்தாரர் நிரூபிக்க வேண்டும் என்பதை விசாரணை நீதிமன்றம் பரிசீலனை செய்ய தவறி விட்டது. மேல்முறையீட்டாளர்/எதிரி, எதிர்மேல்முறையீட்டாளர்/புகார்தாரருக்கு வழங்கிய பதிலறிவிப்பினை விசாரணை நீதிமன்றம் பரிசீலனை செய்ய தவறிவிட்டது. மேல்முறையீட்டாளர் / குற்றம் சாட்டப்பட்டவரால் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துப்பூர்வமான வாதங்களை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ள தவறி விட்டது. எனவே விசாரணைநீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தண்டனையை ரத்து செய்து இம்மேல்முறையீட்டாளர்/எதிரியை விடுதலை செய்ய வேண்டும்.

6. <u>இந்த மேல் முறையீட்டில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் யாதெனில்</u>:–

1. எதிரி மீதான மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 உ/இ 142–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா?
2. விசாரணை நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புரை சரியானதா?
3. மேல்முறையீட்டில் கூறப்பட்டுள்ள காரணங்களுக்காக இந்த மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

R.Velaras Digitally signed by R.Velaras
Date: 2026.06.29 18:47:09 +0530

7. இம்மேல்முறையீட்டு வழக்கில் தரப்பினர்கள் விசாரணை நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டவாரே " அரசு தரப்பு" என்றும், "எதிரி" என்றும் அழைக்கப்படுவர்.

8. <u>பிரச்சனைகள் 1 முதல் 3 க்கான தீர்வு :–</u>

இந்த குற்ற மேல்முறையீட்டு வழக்கானது கடந்த 26.06.2025 அன்று விசாரணை நீதிமன்றமான சங்ககிரி நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனை தீர்ப்பினை எதிர்த்து மேற்படி வழக்கு எதிரியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் தன்னை பு.சா.1 ஆக விசாரித்து கொண்டு பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்களை குறியீடு செய்துள்ளார். எதிரியின் தரப்பில் எதிரி தன்னை எ.த.சா.1 ஆக விசாரித்து கொண்டு எ.த.சா.ஆ.1 மற்றும் எ.த.சா.ஆ–2 சான்றாவணங்களை குறியீடு செய்துள்ளார்.

9. இவ்வழக்கின் புகார்தாரர் தனது சாட்சியத்திலும், மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவு 138 உ/பி 142ன் படிக்கு தாக்கல் செய்துள்ள புகாரிலும், எதிரி தனக்கு நண்பர் என்றும், அவரை கடந்த 3 ஆண்டுகளாக தெரியும் என்றும், மேற்படி எதிரி அவரது குடும்ப அவசர மற்றும் வியாபார செலவிற்காக 01.09.2021 அன்று ரூ.5,00,000/ஐ தன்னிடமிருந்து கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு ஆதரவாக எதிரியின் வங்கியான ஐசிஐசிஐ வங்கி கிளை காசோலை எண்.014673 ஐ 01.10.2021 என தேதியிட்டு ரூ.5,00,000/–த்திற்கு கொடுத்தார் என்றும் அது பு.சா.ஆ–1 என்றும், மேற்படி காசோலையை புகார்தாரர் தனது வங்கியான சங்ககிரி, கரூர் வைஸ்யா வங்கியில் 01.10.2021 அன்று வசூலுக்கு தாக்கல் செய்தபோது மேற்படி எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று பு.சா.ஆ–3 ன் படிக்கு காசோலை திரும்பி

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.06.29 18:47:17 +0530

விட்டது என்றும், அதனால் 11.10.2021 அன்று மேற்படி காசோலையில் கண்ட தொகையை குறித்த காலத்திற்குள் தனக்கு திருப்பி செலுத்தவேண்டும் என்று பு.சா.ஆ–4 வழக்கறிஞர் அறிவிப்பை எதிரிக்கு அனுப்பியதில் அவர் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு பு.சா.ஆ–6 பதிலறிவிப்பை 08.11.2021 தேதியிட்டு தவறான சங்கதிகளோடு அனுப்பி வைத்துள்ளார் என்றும், எனவே எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று எதிரி நன்கு தெரிந்திருந்தும் தன்னை ஏமாற்றும் விதமாக இவ்வழக்கு காசோலையை கொடுத்துள்ள காரணத்தினால் எதிரியை மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138ன் படிக்கு தண்டிக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

10. இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பில் எதிரிக்கு கொடுக்கப்பட்ட பு.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பினை எதிரி பெற்றுக்கொண்டார் என்பதற்கு பு.சா.ஆ–5 ஆவணமானது புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரி பு.சா.ஆ–6 பதில் வழக்கறிஞர் அறிவிப்பினை புகார்தாரரின் வழக்கறிஞருக்கு அனுப்பி வைத்துள்ளார். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பில் புகார்தாரரிடமிருந்து எதிரி TN 52 D 5148 என்ற பதிவெண் கொண்ட லாரியை 2013ம் ஆண்டில் விலைக்கு வாங்கியதாகவும், அவ்வாறு விலைக்கு வாங்குவதற்காக எதிரி ஈரோடு சுந்தரம் பைனான்ஸ் நிதி நிறுவனத்தில் கடன் பெற்றார் என்றும், மேற்படி 2013ம் ஆண்டு எதிரி கடன் பெற்றபோது சுந்தரம் பைனான்ஸ் நிதி நிறுவனத்தில் கேரண்டராக புகார்தாரர் கையொப்பம் செய்தார் என்றும், அவ்வாறு எதிரியின் கடனுக்கு புகார்தாரர் பிணையதாரராக கையொப்பம் செய்ததற்கு ஆதரவாக எதிரியிடமிருந்து நிரப்பப்படாத கையொப்பம் மட்டும் செய்த ஐசிஐசிஐ வங்கி காசோலைகள் –3 ஐ

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.06.29 18:47:23 +0530

புகார்தாரர் பெற்றுக்கொண்டார் என்றும், அவ்வாறு புகார்தாரர் பெற்றுக்கொண்ட காசோலை எண்கள் 014672, 014673, மற்றும் 014674 என்றும், மேற்படி எதிரி 2018 ம் ஆண்டில் ஈகுடாஸ் பைனான்ஸ் நிறுவனத்தில் கடன் பெற்று சுந்தரம் பைனான்ஸ் கடனை அடைத்திருப்பதாகவும், அதன்பிறகு ஈரோடு சக்தி பைனான்ஸ் நிறுவனத்தில் கடன் பெற்றதாகவும், எனவே சுந்தரம் பைனான்ஸ் நிதி நிறுவனத்தில் பெற்றிருந்த கடன் முடிக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் புகார்தாரர் பிணையதாரராக கையொப்பம் செய்தபோது எதிரியிடமிருந்து பெற்ற காசோலை எண்கள் 014672, 014673, மற்றும் 014674 கொண்ட காசோலைகளை தன்னிடம் திருப்பி தரவேண்டும் என்று புகார்தாரர்கள் கேட்டதாகவும், ஆனால் புகார்தாரர் தனக்கு கொடுக்கவில்லை என்றும், தனது குடும்பத்திற்கும், புகார்தாரரின் மாமனார் குடும்பத்திற்கும் இடையே பாதை பிரச்சனை ஏற்பட்ட காரணத்தினால் மேற்படி காசோலைகளில் ஒன்றான 014673 ஐ நிரப்பி வசூலுக்கு தாக்கல் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். மேற்படி எதிரி அவரது பதில் வழக்கறிஞர் அறிவிப்பில் தெரிவித்துள்ள சங்கதிகளை தன்னை எ.த.சா.1 ஆக விசாரித்து கொண்டு தனது சாட்சியத்திலும் தெரிவித்துள்ளார்.

11. இவ்வழக்கின் புகார்தாரரை எதிரியின் தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோதிலும் மேற்படி எதிரியால் அவரது வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை தெரிவித்து இவ்வழக்கு காசோலையான 014673 ஐ 2013 ம் ஆண்டிலேயே புகார்தாரர் வசம் கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி புகார்தாரர் எதிரிக்கு கேரண்டராக சுந்தரம் பைனான்ஸ் நிதி நிறுவனத்தில் கையொப்பம் செய்வதற்காக கொடுக்கப்பட்டது என்றும், கேள்விகள் கேட்கப்பட்ட போது அதற்கு

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.06.29 18:47:30 +0530

புகார்தாரர் தெளிவாக மறுத்து சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி எ.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட எதிரியை புகார்தாரர் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்ட போது இவ்வழக்கு காசோலை எண்.014673 அடங்கிய காசோலை புத்தகம் எதிரிக்கு 09.02.2014 அன்று தான் வழங்கப்பட்டது என ஏற்றுக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எ.த.சா.ஆ.2 ஆவணமானது இவ்வழக்கு காசோலை அடங்கிய காசோலை புத்தகம் எதிரிக்கு 09.02.2014 அன்றுதான் வழங்கப்பட்டுள்ளது என்பதை தெளிவாக வெளிப்படுத்தும் சூழ்நிலையில் எ.த.சா.ஆ–1 ஆவணத்தின் படி எதிரிக்கு 25.05.2013 அன்று சுந்தரம் பைனான்ஸ் கடன் ரூ.8,65,900/–ஐ கொடுத்தபோது இவ்வழக்கு காசோலை எண்.014673 ஐ 25.05.2013 அன்று பிணையமாக புகார்தாருக்கு எதிரி கொடுத்தார் என்று எதிரியின் தரப்பில் தெரிவிக்கப்படும் வாதம் ஏற்புடையது அல்ல. அதற்கு வாய்ப்பே இல்லை. மேலும் மேற்படி எ.த.சா.ஆ–1 தனது குறுக்குவிசாரணை சாட்சியத்தில் இவ்வழக்கு காசோலையிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், இவ்வழக்கு காசோலையைதான் தான் புகார்தாரக்கு கொடுத்ததாகவும் ஏற்றுக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளதால் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 20ன் படிக்கு இவ்வழக்கு காசோலையை நிரப்பிக்கொள்ளும் உரிமையை புகார்தாரருக்கு எதிரி கொடுத்துள்ளார் என்றே அனுமானிக்கவேண்டியுள்ளது.

12. இவ்வழக்கு காசோலை எதிரியுடையது என்றும், அதிலுள்ள கையொப்பம் எதிரியுடையது என்றும் ஏற்றுக்கொண்ட எதிரி மேற்படி காசோலையை 2013ம் ஆண்டே புகார்தாரரிடம் கொடுத்ததாக தெரிவிக்கும் சங்கதி அவரது எ.த.சா.ஆ–1 மற்றும் எ.த.சா.ஆ–2 ஆவணங்களின் அடிப்படைக்கே தவறானது மற்றும் பொய்யானது என

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.06.29 18:47:42 +0530

தெரியவருகின்ற காரணத்தினால் இம்மேல்முறையீட்டாளர்/ எதிரி இவ்வழக்கிலிருந்து தன்னை எவ்வகையிலேனும் விடுவித்து கொள்ளவேண்டும் அல்லது இவ்வழக்கிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்பதற்காக ஆரம்பம் முதலே தவறான சங்கதிகளுடன் எதிர்க்கட்சி செய்து வந்துள்ளார் என்பது தெளிவாகிறது. மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 118 ன் படிக்கு மாறான சங்கதிகளை நிரூபிக்கும்பொருட்டு எதிரி தன்னை எ.த.சா.ஆ–1 ஆக விசாரித்துகொண்டு எ.த.சா–ஆ1 மற்றும் எ.த.சா–ஆ–2 ஆவணங்களை குறியீடு செய்தபோதிலும், மேற்படி எதிரி ஏற்புடைய வகையில் மேம்பட்ட மாறான சங்கதிகளை நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இருதரப்பிலும் முன்னிடப்பட்டுள்ள வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியத்தின் அடிப்படைக்கு எதிரி சட்டப்படியாக நிறைவேற்றப்படவேண்டிய கடனை (legally enforceable debt) தீர்ப்பதற்காக புகார்தாரருக்கு இவ்வழக்கு காசோலையை கொடுத்துள்ளார் என்றும், மேற்படி எதிரி அவரது வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று தெரிந்தே இவ்வழக்கு காசோலையை புகார்தாருக்கு கொடுத்துள்ளார் என்றும், எனவே மேற்படி மேல்முறையீட்டாளர் / எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன்படிக்கு தண்டிக்கப்படக்கூடிய குற்றம் புரிந்துள்ளார் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே மேற்படி விசாரணை நீதிமன்றத்தால் கடந்த 26.06.2025 அன்று STC.No.133/2022– வழக்கில் வழங்கப்பட்ட தண்டனை தீர்ப்பினை ரத்து செய்ய வேண்டிய அவசியமோ அல்லது மாற்றி அமைக்க வேண்டிய அவசியமோ இந்நீதிமன்றத்திற்கு ஏற்படவில்லை. மேல்முறையீட்டாளர்/எதிரியால் இம்மேல்முறையீட்டிற்கான காரணங்களாக இம்மேல்முறையீட்டு வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ள சங்கதிகள் இம்மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்ய

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.06.29 18:47:48 +0530

வேண்டும் என்பதற்காகவே தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மேல்முறையீட்டு வழக்கு நிலைக்கக்கூடியதல்ல என்றும், இம்மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடியாக கூடியது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து பிரச்சனைகள் 1 முதல் 3 வரையிலானவற்றிற்கு தீர்வு காண்கின்றது.

முடிவில், இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. விசாரணை நீதிமன்றம் சுருக்கு விசாரணை வழக்கு எண்.133/2022–இல் கடந்த 26.06.2025–ம் தேதியன்று பிறப்பித்துள்ள தீர்ப்பு மற்றும் தண்டனையை உறுதிசெய்து இம்மேல் முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. எதிரிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்ற விசாரணை நீதிமன்றத்திற்கு உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 29–ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2026.06.29 18:47:55 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சேலம்.

<u>நகல் பெறுநர்</u>

நீதித்துறை நடுவர் எண்.2,
சங்ககிரி.